**தலைப்பு - 228 நீதிமன்ற நிர்வாகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 228 - நீதிமன்ற நிர்வாக திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிர்வாக திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற நிர்வாக திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன எனவும.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடு வெளிப்படுத்தப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய் வாண்டினுள் திணைக்களத்தின் புத்தகங்கள் பிரகாரம் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் பெறுமதி ரூபா 1,115,633,828 ஆனதுடன் திறைசேரி அச்சீடு (SA– 82) கூற்றின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 1,123,749,063 ஆனதில் நிதி நிலைமை கூற்றில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெருமதி ரூபா 8,115,235 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மாவனல்லை நீதி மன்றத்தில் வழக்கு பண்டங்கள் அறையை கட்டுவதற்காக நடைமுறை வேலையின் கீழ் இததொகையை கொடுப்பனவு செய்யும் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்து. மாவனல்ல நீதிமன்றத்தில் அமைந்துள்ள கட்டிடத்தை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்து சொத்தாக கணக்கீடு செய்ததற்காக அனுப்பியிருந்ததுடன், அந்த முழுப் பெறுமானத்தையும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மதிப்பீட்டு பெறுமானத்தினுள் மேற்குறித்த பெருமதிகளும் உள்ளடங்கி உள்ளதால் கேகல்லை உயர் | நிலையான சொத்துக்கள் சிகாஸ் வேலை திட்டத்தின் உடன் ஒப்பிட்டு சரியாக கணக்குகளில் அறிக்கையிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நீதிமன்றத்தில் நடைமுறை வேலையாக காணப்பட்ட ரூபா 8,115,235 ஆன பெறுமதியை கேகல்லை உயர் நீதிமன்றத்தின் சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**(ஆ) முற்பண கணக்கு மீதிகள்**

முற்பண கணக்குகளின் ஆண்டிறுதியில் உள்ள நீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைப்பாடு வெளிப்படுத்தப்பட்டது

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதிக்கு உயர் நீதிமன்ற வலயத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தரின் முற்பண ''பீ'' கணக்கின் பிரகாரம் உயர் நீதிமன்ற 08 வலயங்களில் தனிநபர் கணக்கு மீதி வகைப்படுத்தும் பொழிப்பில் கூட்டுத்தொகை 638,410,286 ஆனதுடன் கட்டுப்பாடு கணக்கின் மீதி ரூபா 639,175,873 ஆனதில் மீதிகளிற்கிடையில் ரூபா 765,587 ஆன வித்தியாசம் காணப்பட்ட போதும் அந்த வித்தியாசத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்கள கட்டுப்பாட்டு கணக்கின் மீதி மற்றும் 26 நீதிமன்ற வலயங்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்குகள் பிரகாரம் கட்டுப்பாட்டு கணக்கின் மீதிக்கிடையிலான வித்தியாசத்திற்கு காரணமாக அமைவது பல ஆண்டுகளாக நிலவிவரும் ஆரம்ப மீதியின் வித்தியாசம்மென அறிவிக்கப்பட்டிருந்தது. | வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியன்று கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளின் பெறுமதி ரூபா 2,280,562 ஆன போதும், அப் பெறுமதியை விஞ்சி ரூபா 27,209,028 பொறுப்புக்களாக செலுத்தப்பட்டிருந்தது. | 228 செலவின தலைப்பின் கீழ் குறித்த கருத்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு போதாமையினால், வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் ஆலோசனை மீது நி.பி 208 இன் | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய பொறுப்பேற்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அதிகாரம் பிரகாரம் 110 அமைச்சின் செலவின தலைப்பின் கீழ் 110-1-02-25-2509 எனும் செலவின தலைப்பிற்கு பாதீட்டு உத்தேசத்தின் ஊடாக வழங்கியிருந்த ஏற்பாட்டை 228 செலவின தலைப்பின் கருத்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்ய பெற்றுக்கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |

## 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டப்பாட்டு தொகுதியொன்றை தயாரித்து பேணிச்செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்ய வேண்டியதுடன், அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை பயனுறுதிமிக்கதாக பேணிச்செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய போதும், அம் மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொனறை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொண்டதற்கான கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதி கட்டுப்பாட்டிற்கான ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு நிலைமை ஒன்று நிறுவனத்தினுள் நிலவுவதாகவும் நிதி கட்டுப்பாட்டிற்காக உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியின் அகப்பூர்வமான தன்மை மேற்பார்வை செய்யவும் அதன் பிரகாரம் தொகுதியை ஆக்கப்பூர்வமாக செயற்படுத்த தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கு அவ்வப்போது மீளாய்வு மேற்கொள்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்பாடு ஒன்றை செய்துள்ளதுடன் அதனை நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்கி உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுத்தாய்வு செய்து காட்டப்பட்டுகிறன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமை** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| | xxiv அத்தியாயத்தின் 4.2.4 பிரிவு | 7,404,657 | தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பிரகாரம் ஓய்வு பெறவிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் தொடர்பான விபரங்களை ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு அறித்தனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓய்வு பெற்ற உதிதியோகத்தர்களினது கடன் மீதிற்காக ஓய்வூதிய திணைக்களத்தினால் ஏற்பாடு விடுவிக்கப்பட்டவுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த நீதிமன்றங்களின் அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | தாபன விதிக் கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | xxiv அத்தியாயத்தின் 4.2.4 பிரிவு | | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளை விஞ்சி உயர் நீதிமன்ற வலயத்தில் பதிவாளர் ஒருவருக்கு மோட்டர் வாகன கடன் மற்றும் துவிச்சக்கர வண்டி கடன் வழங்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய நிலுவை கடன் மீதி தொடர்பாக கோவைகளை பரிசோத்த போதும், இது வரை எவ்வித தகவல்களையும் கண்டறிய முடியாது போனதாகவும், மேலும் கண்டறிந்து அக்கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு ஆலோசனை வழங்கியதாக | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அறிவிக்கப்பட்டு இருந்து. | |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | நிதிப்பிரமாணம் 109 (1) மற்றும் (2) | 423,608 | 10 ஆண்டுகளை விஞ்சிய நட்ட சேதங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நட்ட சேதங்கள் பல ஆண்டுகள் பழையதாகையால் அவற்றிற்குரிய விசாரணைகளை நடாத்துவது தொடர்பாக காணப்படும நடைமுறை பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுத்து, அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிமானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | நிதிப்பிரமாணம் 104 | | மீளாய்வாண்டினுள் விபத்திற்குள்ளான வாகனமொன்று தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | KP 1140 கொண்ட வாகனத்திற்காக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிமானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | நிதிப்பிரமாணம் 396 | 2,850,922 | உயர் நீதிமன்ற 22 வலயங்களிற்குரிய 06 மாதங்களை விஞ்சிய காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காசோலைகள் தொடர்பாக நி.பி.396 பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு தொடர்ந்து நீதிமன்றங்களை அறிவுறுத்தியுள்ளதாக வும், எதிர்காலத்தில் வெவ்வேறாக நீதிமன்றங்களின் தகவல்களை பெற்று அது தொடர்பாக கவனம் செலுத்தி இக்குறைகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிமானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிமித்த கட்டுநிதியை வழங்கி பின்னர் குறித்த பணியை பூர்த்தி செய்து 10 நாட்களில் உப கட்டுநிதியை தீர்க்க வேண்டிய போதும், 10 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்டு ரூபா 276,000 ஆன முற்பணம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிமித்த கட்டுநிதியை பெற்றுக் கொள்ளும் போது குறித்த பணியை பூர்த்தி செய்து 10 நாட்களில் முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த அலுவலர்களை அறிவூட்டியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிமித்த உப கட்டுநிதியை உரிய காலத்தினுள் மீண்டும் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.5 வைப்பு மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதான அலுவலகத்தின் 03 ஆண்டுகளை விஞ்சிய ஒப்பந்தங்களிற்கான நிறுத்தற் பண வைப்ப மீதி ரூபா 155,334,743 ஆனது | விடுவிக்க முடியமாகவுள்ள அனைத்து நிறுத்தற் பணத்தையும் விடுவிக்கவும் அவ்வாறில்லை எனில் நி.பி 571 பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய அலுவலர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களை தீர்க்க அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கொழும்பு உயர் நீதிமன்றத்தினுள் மூன்றாம் தரப்பினரிற்கு செலுத்த வேண்டிய தற்காலிக நிறுத்தல் வைப்புக் கணக்கு 05 ஆண்டுகளை விட பழைய மீதி ரூபா 26,248,905 ஆனதுடன் ஒப்பந்தங்களிற்கான நிறுத்தற் பணம் வைப்பு கணக்கினுள் 05 ஆண்டுகளை விட பழைய மீதி ரூபா 3,179 ஆனது. | தீர்ப்பதற்கு முடியமாகவுள்ள அனைத்து வைப்புத் தொகையையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும், குறித்த வைப்பு உரிமையாளர்கள் கோரிக்கை விடுக்காத மீதிகள் தொடர்பாக நி.பி 571 இல் குறிப்பிடப்படும் செயன்முறையை பின்பற்றி அரச வருமானத்திற்கு செலவு வைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய அலுவலர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களை தீர்க்க அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | களுத்துறை உயர் நீதிமன்றத்தில் டென்டர் வைப்புக் கணக்கினுள் 05 ஆண்டுகளை விட பழைய மீதி ரூபா 5,706,726 ஆனதுடன் ஒப்பந்தங்களிற்கான நிறுத்தற் பணம் வைப்பு கணக்கினுள் 05 ஆண்டுகளை விட பழைய மீதி | தீர்ப்பதற்கு முடியமாகவுள்ள அனைத்து வைப்பு மீதிகளையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும், குறித்த வைப்பு உரிமையாளர்கள் கோரிக்கை விடுக்காத மீதிகள் தொடர்பாக நி.பி 571 இல் குறிப்பிடப்படும் | இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களை தீர்க்க அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ரூபா 41,038 ஆனது. | செயன்முறையை பின்பற்றி அரச வருமானத்திற்கு செலவு வைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய அலுவலர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கையில் காணப்படும் அனைத்து நீதிமன்றங்களையும் தன்னியக்க மயப்படுத்தும் திட்டத்தின் அறிவூட்டும் நிகழ்சித் திட்டத்தை நடத்துவதற்கு அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளை பின்பற்றாது அமைச்சினால் தயாரிக்கப்பட்ட அளவுத் திட்டங்களுக்கு இணங்கும் வகையில் மேற்கொண்டு உயர் வசதிகளுடன் கூடிய 05 ஹோட்டல்களிலிருந்து தொலைபேசி மூலம் விலைகளை கலந்துரையாடி ஹோட்டல் ஒன்றை தெரிவுசெய்து கட்டணமாக ரூபா 5,327,770 செலுத்தப்பட்டிருந்தது | இந்த அறிவூட்டும் நிகழ்ச்சி திட்டத்திற்காக திணைக்களத் தலைவர்கள், உப குழு உறுப்பினர்கள், ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், குறித்த தரப்பினரின் முகவர் நிறுவனங்களின் விருந்தினர்கள் போன்ற முக்கிய பிரமுகர்கள் பங்குபற்றியதுடன், அந்த அலுவலர்களுக்கு பொருந்தும் வசதிகளைக் கொண்ட மற்றும் அந்த அலுவலர்களுக்கு கௌரவமான உபசரிப்பை வழங்க பொருத்தமான சூழலில் நிகழ்ச்சி திட்டத்தை நடத்த தேவையானதால் கொழும்பு நகரில் கிட்டிய இடமாக இருத்தல், 2021.12.29 திகதியன்று பெற்றுக் கொள்ள முடியுமா இருத்தல் போன்ற விடயங்களை கவனத்தில் கொண்டு நிறைவேற்று அலுவலர்களுடன் கூடிய குழு ஒன்றினால் வெளிப்படை தன்மை பாதுகாக்கப்படும் வகையில் தொலைபேசி ஊடாக கலந்துரையாடி அது பற்றி குறித்துக் கொண்டு கையொப்பமிட்டு 2021.12.29 திகதிக்கு ஒதுக்கிக் கொள்ள முடியுமாக ஹில்டன் ஹோட்டலை பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் தெரிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிற்கு இணங்கிதாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 அரச உத்தியோகத்தரின் பிணை வைப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி பிரமாணம் 880 பிரகாரம் நீதிமன்ற சேவையிலுள்ள பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் உரியவாறு பிணை வைக்க வேண்டிய போதும், 08 உயர் நீதிமன்ற வலையங்களில் 45 அலுவலர்களிடமிருந்து ரூபா 970,000 ஆன தொகையொன்றை பிணையாக பெற்றுக்கொள்ள வேண்டிய போதும், பிணை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டியுள்ள விடயம் பிரகாரம் நீதிமன்றங்களில் பிணை வைக்க வேண்டிய அலுவலர்களிடமிருந்து பிணை வைக்க தேவையான முன் நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து நீதிமன்றங்களையும் அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும |
| (ஆ) | புத்தளம் பிரதேசத்திலான உயர் நீதிமன்றத்தில் கடமையிலுள்ள 12 அலுவலர்களின் பிணை வைக்க வேண்டிய தொகைக்காக 2022 மே 18 திகதி பிணைமுறை பதிவிற்காக நீதிமன்ற அமைச்சிற்கு அனுப்பியுள்ள போதும் மீளாய்வாண்டினுள் அவற்றை அங்கீகரித்திருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டியுள்ள விடயம் பிரகாரம் நீதிமன்றங்களில் பிணை வைக்க வேண்டிய அலுவலர்களிடமிருந்து பிணை வைக்க தேவையான முன் நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து நீதிமன்றங்களையும் அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பிணைமுறி பதிவினை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நுவரெலிய உயர் நீதிமன்றத்தின் இரண்டு அலுவலர்களிற்காக பொது 235 வடிவத்தை பிணை தொகையை தீர்மானித்தல் தொடர்பான பரிந்துரை 2022 மே 18 திகதி நீதிமன்ற அமைச்சுக்கு அனுப்பியுள்ள போதும், 2022 ஆண்டினுள் அதற்காக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் பிரகாரம் நீதிமன்றங்களில் பிணை வைக்கவேண்டிய அலுவலர்களிடமிருந்து பிணை வைப்பதற்கு தேவையான முன் நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து நீதிமன்றங்களையும் அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பிணை வைக்க வேண்டிய அலுவலர்களிடமிருந்து விரைவில் பிணை பெற்றுக் கொள்ள முன்நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் |

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சிறுவர்களின் சாட்சிகளை திறந்த நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளாது கட்புலன் தொடர்புகள் ஊடாக வழங்கும கருத்துத்திட்டத்திற்காக 26 தொடர்பாடல் தொகுதிகள் பெற்றுக் கொள்ள ரூபா 48,589,772 தொகை மற்றும் பத்திரிகை அறிவித்தலாக ரூபா 118,827 தொகையை செலவிட்டிருந்தது போதும், கணக்காய்வு திகதிவரையும் நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | வீடியோ தொடர்பாடல் தொழில்நுட்ப தொகுதிகளை கொள்வனவு செய்து இந்த அமைச்சின் கீழான தேவைப்பாடுகளிற்கு உபகரணங்களை பொருத்துதல் மேற்கொள்ளப்படுவதாகவும், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் சாட்சிகளை பெற்றுக் கொள்ள பொருத்தமான இடம் தொடர்பாக இறுதி முடிவிற்கு வருவதற்கு முடியாததால் இதனை செயற்படுத்துதல் தாமதமாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கருத்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | இலங்கையின் நீதிமன்ற தொகுதியை தன்னியக்க மயப்படுத்தும் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் தொகுதி ஆய்வொன்றை மேற்கொள்ளும் பொறுப்பு இலங்கை தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு இருந்ததுடன் அதற்காக மதியுரை சேவையை வழங்க உடன்பட்டிருந்த ரூபா 79,258,000 ஆன தொகையிலிருந்து ரூபா 36,466,500 தொகை 2021 ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது.<br>கருத்திட்டத்திற்காக 2017 ஆண்டு முதல் 2022 ஆகஸ்ட் 01 வரை ரூபா 49,034,981 ஆன செலவு மேற்கொண்டிருந்த போதும், இக்கருத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒப்பந்ததாரரை தெரிவு செய்வதனை மாத்திரம் மேற்கொண்டிருந்ததுடன், மதியுரை சேவையை வழங்குவதற்காக இலங்கை தகவல்கள் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்திற்கு செலுத்திய தொகையிலிருந்த ரூபா 26,746,499 ஆன தொகையொன்றை மீண்டும் நீதிமன்ற அமைச்சிற்கு அனுப்பியருந்ததுடன் கருத்திட்டத்தை இடைநிறுத்த அமைச்சு தீர்மானித்திருந்தது. | நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட அரச செலவின குறைப்பு இலக்கம் 03/2022 மற்றும் 2022.04.26 திகதிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் திட்டத்தை பிற்போட்டுள்ளதாகவும் கருத்திட்ட மீதித் தொகையாக இலங்கை தகவல்கள் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனத்திடமிருந்து ரூபா 26,746,499.00 ஆன தொகையை நீதிமன்ற அமைச்சிற்கு கிடைத்து பொது திறைசேரிக்கு அனுப்பி உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கிடைத்த நிதியை குறித்த பணிக்கு ஈடுபடுத்த வேண்டியதுடன், அவ்வாறு இல்லாது விட்டால் உடனடியாக பொது திறைசேரிக்கு அனுப்பி விட வேண்டும். |

.

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நீதிமன்ற மண்டபம் மற்றும் சிறைச்சாலைக்கு இடையில் இடையிலான வீடியோ கலந்துரையாடல் தொகுதியொன்றை தாபிப்பதற்காக 2021 ஆண்டில் அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் ரூபா 100,498,168 ஆன பெறுமதிக்கு இலங்கை தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்கியிருந்ததுடன், இதற்காக நீதிமன்ற அமைச்சு சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் இலங்கை தகவல்கள் மற்றும் தொலைத் தொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனத்துடன் உடன்பட்டுடிருந்தது. இந்த கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக சிறைச்சாலைகள் மற்றும் நீதிமன்ற மண்டபங்களில் தெர்வு செய்யப்பட்ட இடங்களில் தகவல்கள் LGN நிலைப்படுத்த தேவையான வன்பொருள் மற்றும் உகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் முதலாம் ஆண்டு பராமரிப்பிற்காக ரூபா 61,966,408 ஆன தொகையை 2021 திசெம்பர் 21 திகதி இலங்கை தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. செலவு அதிகமான இக்கருத்திட்டத்தை டென்டர் கோராமல் ICTA நிறுவனத்திற்கு ஒப்படைத்திருந்ததுடன, 2023 பெப்ரவரி அளவில் இக்கருத் திட்டத்தை செயற்படுத்துவது இடை நிறுவத்தப்பட்டிருந்தது. இலங்கை தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்திற்கு செலுத்தியிருந்த ரூபா 61,996,408 ஆன தொகையை 2023 பெப்ரவரி 28 திகதியதாக அசைசிற்கு மீண்டும் அனுப்பியிருந்ததுடன், ஓராண்டு காலமாக இத்தொகையை வெளி நிறுவனம் ஒன்றினால் பயன்படுத்திய பின்னர் மீண்டும் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக பாதிட்டை கவனத்தில் கொள்ளும் போது உடன்பட்ட ஆரம்ப கருத்திட்ட கிரயம் கவனிக்கத்தக்க அளவு அதிகரித்தமையால் இலங்கை தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனம் மற்றும் இக்கருத்திட்டத்தை முதலாம் ஆண்டுக்காக (2021) செலுத்திய கருத்திட்ட கிரயத்தினுள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பகுதியை செயற்படுத்த 2022 ஆண்டில் கலந்துரையாடியதுடன், 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக்கருத் திட்டத்தை தொடர்ந்தும் செயற்படுவதில்லை எனக் கருதி 2023 பெப்ரவரி மாதத்தில் இலங்கை தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனத்திற்கு மேற்கொண்ட ரூபா 61,996,408 ஆன கொடுப்பனவு நீதிமன்ற அமைச்சுக்கு கிடைத்து பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உடன்பட்ட காலத்தினுள் வேலைகளை பூர்த்தி செய்து கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தவிருந்தது . |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் மரணித்த அலுவலர்களிடமிருந்து அளவிட வேண்டிய கடன் மீது ரூபா 4,748,929 ஆனதுடன், அதனுள் 05 ஆண்டுகளை வீஞ்சிய கடன் மீதி ரூபா 337,872 ஆனது. | அநேகமான கடன் மீதிகளை கோவைகளில் காணப்படும் குறைபாடு காரணமாக இக்கடன்களுக்காக ஓய்வூதிய திணைக்களத்திலிருந்து ஏற்பாட்டை தீர்க்கப்படவில்லை எனவும், பல ஆண்டுகளாக அறபிடப்படாது காணப்படும் கடன் மீதிகளை ஒழுங்கான தகவல்கள் இல்லாத காரணத்தால் அறவிடுவது கடினம் எனவும், கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பாக அமைச்சினால் நீதிமன்றத்தில் இருந்து மாதாந்த முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ள அறிவுறுத்தல் வழங்கி உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன் மீதிகளை விரைவில் அளவிட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் வேலை தடை செய்யப்பட்ட அலுவலர்களிடமிருந்து அளவிட வேண்டிய கடன் மீதி ரூபா 10,225,759 ஆனதுடன், அதனுள் உள்ளடங்கும் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாக உள்ள கடன் மீதிகளில் பெறுமதி ரூபா 5,265,153 ஆனது. | அதிகமான கடன் மீடுகள் மிகப் பழைய மற்றும் ஒழுங்கான தகவல்கள் இல்லாத காரணத்தால் அறவிடுவது கடினமாக உள்ளதாகவும், சில வேலை தடை செய்யப்பட்ட அலுவலர்களின் ஒழுக்கற்று நடவடிக்கைகள் முடிவடைந்து இல்லாததால் இந்த கடன் மீதிகளை அறவிடுவது கடினமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | கடன் மீதிகளை விரைவில் அளவிட வேண்டும் |
| (ஈ) | சேவையை விட்டுச் சென்றிருந்த அலுவலர்களிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 6,612,852 ஆனதுடன், அதனுள் உள்ளடங்கும் 05 ஆண்டுகளை வீஞ்சிய காலமாக அறவிடப்படாது காணப்படும் கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 2,394,003 ஆனது. | அரசிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன் தொகையை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உயர் நீதிமன்றத்தினால் அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து முயற்சிகளையும் எடுத்த பின்னர் மேலும் அறவிட முடியாத கடன் வீதிகளை மாத்திரம் பதிவழிக்க சமர்ப்பிக்குமாறு அனைத்து உயர் நீதிமன்றங்களையும் அறிவுறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (உ) | 12 கருத்திட்டங்களுக்குரிய 2017 மற்றும் 2019 ஆண்டுகளில் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கியிருந்த வாடகை வேலை முற்பணங்களிலிருந்து ரூபா 239,387,159 ஆன மீதியொன்று 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. | அனுராதபுர நீதிமன்ற கட்டிட தொகுதியை நிர்மாணிப்பதற்குரிய பட்டியல்கள் எதுவும் 2022 ஆண்டில் கொடுப்பனவிற்கு சமர்ப்பித்திருக்காத தனால், அக கருத்திட்டத்திற்கு வழங்கிய முற்பண தொகையை தீர்த்துக் கொள்ள முடியாதிருந்ததுடன், அக் கருத்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக | உடன்படிக்கை பிரகாரம் கடமையை பூர்த்தி செய்துகொள்வது தொடர்பில் கவனம் செலத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படும் எதிர்வரும் பட்டியல்கள் மூலம் மேலும் அறவிடப்பட வேண்டிய முற்பணத் தொகையான ரூபா 6,503,988.60 ஆன தொகையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் வெலிமட, இரத்தினபுற மற்றும் பூகொடை நீதிமன்ற கட்டிடத்தொகுதியை நிர்மாணக்கும் கருத்திட்டங்களிற்கு உரிய அறவிட வேண்டிய முற்பணத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**4 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 4986 ஆனதுடன், உள்ளவறாான பதிவியணியினர் 4252 ஆனதில் 734 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் அரச செலவுகளை கட்டுப்படுத்துவதன் அடிப்படையில் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அலுவலக ஊழியர் நீதிமன்ற பாதுகாப்பாளர், அழைப்பானை பகிர்வர்கள் மற்றும் எஸ்கீசி செயல்படுத்துனர்கள் போன்ற பதவிகளில் கூடுதலான அளவு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த அளவுகள் முறையே 516, 70 மற்றும் 136 ஆனது | வரவு செலவு சுற்றறிக்கை கஇலக்கம் 03/2022 இன் அரச செலவுகளை கட்டுப்படுத்துவதன் அடிப்படையில் அரசு சேவைக்கு ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பதவியணியினரை மீளாய்வு செய்து வெற்றிடங்களை பூர்த்தி செய்துக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அம்பாறை, அவிஸ்ஸாவேல்ல, ஹோமாகம போன்ற வலயங்களில் கணக்காளர் பதவிக்காக பதில் கடமை மூன்று கணக்காளர்களை இணைத்து இருந்தத்துடன், அந்த வலயங்களிற்காக அந்த பதவி வெற்றிடமான காலங்கள் முறையே 3, 2, 1 ஆண்டுகளாக இருந்தது | பதில் கடமை அடிப்படையின் பணியாற்றும் மூன்று உத்தியோகத்தர்களின் பதிற்கடமை காலத்தை மேலும் நீடிக்க மற்றும் அரச சேவையின் ஓய்வு பெற்றுள்ள கணக்காளர் பதவியை வகித்த இரண்டு உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கவும், நீதிமன்ற அதிகார எல்லையை கிட்டிய பிரதேச செயலகங்களில் பணியாற்றும் கணக்காளர்களை பதில் கடுமை அடிப்படையின் மீது கடமையில் ஈடுபடுவத்துமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக அறிவித்திருந்தது | வெற்றிடங்களை நிரந்தர அடிப்படையில் பூர்த்தி செய்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |